# ‘அப்பா’ என்று அழைக்க வைத்து நம் உள்ளங்களையெல்லாம் உருக்கியவர்!

# டில்லிக்கு அஞ்சி ஆள்பவர் அல்ல! தமிழ் - தமிழ்நாடு சிறக்க ஆள்பவர் நம் முதல்வர்!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்நின்று நடத்திய

## முதல்வர் பிறந்தநாள் விழாவில் நீதியரசர் அக்பர்அலி புகழாரம்!

சென்னை, மார்ச். 13-

சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னின்று நடத்திய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவில் நீதியரசர் அக்பர் அலி அவர்கள் உரையாற்றும் போது “டில்லிக்கு அஞ்சி ஆள்பவர் அல்ல, தமிழ், தமிழ்நாடு சிறக்க ஆள்பவர் நம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்” என்று புகழாரம் சூட்டினார்.

மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவில் நீதியரசர் ஜி.எம்.அக்பர்அலி அவர்கள் பேசியதாவது:

நமது தலைவர், நமது முதல்வர் அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவை, பல்வேறு விதமாக ஏறத்தாழ மனிதநேயம் 68 என்ற வரிசையில் கடந்த சில வாரங்களில் சீரோடும், சிறப்போடும் நடத்திக் கொண்டிருக்கின்றன, அந்த மக்கள் தலைவரின் நம்பிக்கையைப் பெற்ற செயல் வீரர் நமது அன்பிற்கும், பாசத்திற்கும் உரிய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களே,

இதை எப்படிப் புகழ்வது என்றே தெரியாது; ஏனென்றால், அவருடைய கவி வரிகள் நம்முடைய காதுகளில் எப்போதுமே ஒலித்துக் கொண்டிருக்கின்றன. மாபெரும் கவிஞர் கவிப்பேரரசு அவர்களே,

இந்த ஒரு மேடை மிகவும் சிறப்பான ஒரு மேடை. எத்தனையோ தலைவர்களுடைய பிறந்த நாள் விழாக்களை நாம் பார்த்திருக்கின்றோம், கண்டிருக்கின்றோம். ஆனால், மக்களின் முதல்வர் என்ற பெயர் என்ற பெயரெடுத்த இந்தியாவிலேயே நெம்பர் ஒன் முதல்வர் என்று பெயரெடுத்த, உலகம் முழுவதும் திரும்பிப் பார்க்க வைத்த ஒரு தலைவருடைய பிறந்த நாள் விழாவை - மனிதநேய விழாவாக - ஆகா, நமது அமைச்சர் பெருமான் அவர்களுக்குத்தான் இத்தகைய பெருமை சேரும்.

அவர் இந்த விழாவிற்குக் கொடுத்திருக்கின்ற பெயர் மனிதநேய விழா - அவருடைய பங்களிப்புக்குப் பெயர் மனிதநேயம்.

ஒருமுறை அந்த முகத்தைப் பாருங்கள். அந்த முகத்தைப் பார்த்துவிட்டுச் செல்லுங்கள், அதில் இருக்கக்கூடிய அன்பும், பாசமும் உங்களுக்குத் தெரியும்.

**கண்கள் மிளிரும் மனிதம் மிளிரும்!**

அவர் புன்னகைக்கும்போது, அந்தப் புன்னகையை நான் பலமுறை சந்தித்திருக்கின்றேன். நீங்கள் காணொலியில் அவர் உரையாற்றும்போது பார்த்திருக்கலாம். அவர் எங்கெல்லாம் சென்று மக்களை சந்திக்கின்றாரோ, அவருடைய மகிழ்ச்சிகரமான புன்னகையை நீங்கள் பார்க்கலாம். அந்தக் கண்கள் மிளிரும். அந்த மனிதம் மிளிரும். அந்த மனிதநேயத்தைப்பற்றி பேசுவதற்கு நாமெல்லாம் இங்கே வந்திருக்கின்றோம்.

என்னுடைய அனுபவத்தை நான் இங்கே சொல்கிறேன். சென்ற டிசம்பர் மாதம், அறநிலையத் துறை அமைச்சரின் ஏற்பாட்டின்படி, வடசென்னை மாவட்டத்தில் டான்போஸ்கோ பள்ளியில் கிறித்துவப் பெருவிழா நடந்தது. அந்த விழாவிற்கு, அமைச்சர் அவர்களும், மேயர் அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் வந்திருந்தார்கள்.

**முதலமைச்சரின் மனிதநேயம்!**

அது ஒரு கிறித்துவப் பெருவிழா - அந்த மேடையில், இஸ்லாமிய முகமாக நான் நின்று கொண்டிருந்தேன். இந்து முகமாக சாந்தலிங்க அடிகளார் அவர்கள் நின்று கொண்டிருந்தார். கிறித்துவப் பேராயர் அவர்களும் நின்று கொண்டிருந்தார்.

அப்போது உரையாற்றிய தமிழக முதலமைச்சர் அவர்கள், இதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிட மாடல் அரசு. ஒரு மத நல்லிணக்க அரசு. சிறுபான்மையர்களை யெல்லாம் ஒட்டிப் பாராட்டிப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்ற அரசு என்று அன்றைக்கு அவர் சொன்னார். அவருடைய உரையை முடித்துவிட்டு, மேடையில் வைக்கப்பட்டிருந்த கேக்கை வெட்டிச் சாப்பிடுங்கள் என்று சொன்னார். அமைச்சர் அவர்களும், மேயர் அவர்களும் மற்றும் பலரும் முன்வரிசையில் நின்று கொண்டிருந்தனர்.



நான், பின் வரிசையில் நின்று கொண்டிருந்தேன். கேக்கை வெட்டினார்கள்; பேராயர் அவர்கள், நம்முடைய முதலமைச் சருக்குக் கேக்கை கொடுத்தபோது, அன்போடு வாங்கி ருசித்து சாப்பிட்டார் அந்தப் பெருமகன். வேறு யாராவது கேக் சாப்பிடாமல் இருக்கிறார்களா என்று பார்த்துவிட்டு, நம்முடைய அமைச்சர் பெருமான் ஒரு காகிதத்தைக் கொடுக்க, அதில் கையைத் துடைத்துவிட்டு, திரும்பினார், என்னைப் பார்த்தவுடன், இவருக்குக் கொடுக்கவில்லையே என்று, என்னுடைய கையைப் பிடித்து இழுத்து வந்து, என்னுடைய வாயில் கேக் ஊட்டினாரே, அந்த மனிதநேயம்.

அவர் நினைத்திருந்தால், நடந்து போயிருக்கலாம். தமிழக முதல்வர் அவர். ஆனால், மனிதநேயம், இங்கே அக்பர் அலி என்ற ஒருவன் நின்று கொண்டிருக்கின்றான். அவனுக்கும் அந்தக் கேக்கை ஊட்டவேண்டும் என்று சொன்னதே, அந்த மனசு அவருக்கு இருக்கிறது.

நம்முடைய முதலமைச்சரைப் பற்றி, நம்முடைய நீதியரசர் அவர்கள் வரிசைப்படுத்தி சொன்னார். அவர் வரிசைப்படுத்திச் சொல்லிவிட்ட பிறகு, அவரைப்பற்றி சொல்வதற்கு ஏதுமில்லை என்ற நிலைதான். கடந்த நான்காண்டு காலம் தமிழக முதல்வர். இந்த நான்காண்டு காலத்தில், அவருடைய இடம், இந்தியாவின் நெம்பர் ஒன் முதலமைச்சர்.

மாநில சுயாட்சியைப் போராடிப் பெற்றுத் தரக்கூடிய ஒரு முதல்வராக. இந்தியாவில் இருக்கக்கூடிய முதல்வர்களுக்கெல்லாம் ஒரு பாடமாக - ஒரு முன்னுதாரணமாக இருக்கக்கூடிய ஒரே ஒரு முதல்வரைப் பார்க்கவேண்டும் என்றால், அவர்தான் – மனிதநேய பண்பாளரான தமிழக முதலமைச்சர் அவர்கள்.

**பொறுத்திருந்தே பூமியை ஆண்டு கொண்டிருக்கிறார்!**

ஒரு பரிணாமத்தை நான் பார்க்கிறேன். கவிப்பேரரசு அவர்களின் முன்பாக, இப்படி ஒரு வார்த்தையை நான் ஆரம்பிக்கின்றேன்.

**ஐயா, யாரோ உழைத்த உழைப்பாலே**
**ஏற்றம் காண்பவர் அவர் அல்ல!**
**யாரோ உழைத்த உழைப்பாலே**
**ஏற்றம் காண்பவர் அவர் அல்ல!**
**போராட்டங்கள் நடக்கையிலே**
**போய் எங்கோ அவர் ஒளியவில்லை!**
**சீராய் கழகம் தலைவணங்க**
**சிறையில் பலநாள் தவமிருந்தவர்.**
**அகவை 15 இல்**
**மாணவர் மன்றம் அமைத்து,**
**அகவை 21 இல்**
**கொடுஞ்சிறை கண்டு!**
**அகவை 35 இல்**
**இளைஞரணிக்குத் தலைமையேற்று!**
**அகவை 36 இல்**
**சட்டப்பேரவையில் முதலடி**
**எடுத்து வைத்து!**
**அகவை 45 இல்**
**மாநகராட்சித் தந்தையாகி!**
**அகவை 65 இல்**
**எதிர்க்கட்சித் தலைவராகி**
**அகவை 68 இல்**
**முதல்வராகி,**
**பொறுத்திருந்தே பூமியாண்டு**
**கொண்டிருக்கின்ற நமது முதல்வர்.**
**ஒரு நல்லாட்சியைத்**
**தந்து கொண்டிருக்கின்றார்.**
**டில்லிக்கு அஞ்சி ஆள்பவர் அல்ல!**
**தமிழ் சிறக்க, தமிழ்நாடு சிறக்க ஆள்பவர்**
**இவர் பெரியார் பள்ளி மாணவர்**
**பேறறிஞர் அண்ணா வழி நடப்பவர்**
**வறியோர் வாழ திட்டம் பல வகுத்த**
**கலைஞர் வழியில்,**
**திராவிட மாடல் ஆட்சி நடத்துபவர்!**
**கலைஞர் வழியில் ஓராட்சி என்பது**
**இந்த நான்காண்டு காலத்தில்**
**நாம் பெற்றிருக்கின்ற பெருமை!**

**பராசக்தி திரைப்படத்தைப்பற்றி இங்கே சொன்னார்கள். அதில் ஒரு பாடல் வரும்;**

**“பொருளே இல்லாருக்குத் தொல்லையா?**
**புதுவாழ்வே இல்லையா?”**
**என்ற பாடல்தான் அது.**

**கலைஞர் பராசக்தியிடம், “பொருளே இல்லாருக்குத் தொல்லையா?**
**புதுவாழ்வே இல்லையா?” என்று கேட்க,**
**தனயன் என்ன செய்கிறார் பார்த்தீர்களா?**
**ஒரு தாயின் பாசத்தோடு குழந்தைகளுக்குக் காலை உணவு.**
**ஒரு தனயனின் பாசத்தோடு, பேருந்தில் தங்கைகளைப் பயணிக்க வைத்தது!**
**ஒரு தந்தையின் பாசத்தோடு, மகளிருக்கு உரிமைத் தொகை வழங்குவது.**

இங்கே சொன்னார்களே, நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண்களை உருவாக்கி, நான் முதல்வனை உருவாக்கி, அவர்களையெல்லாம் அப்பா என்று அழைக்க வைத்தவர்.

உங்களுக்கெல்லாம் நினைவிருக்கின்றதா என்று எனக்குத் தெரியவில்லை. கலைஞர் அவர்கள் மறைந்தபோது, “தலைவரே, தலைவரே, தலைவரே“ என்று கலைஞரை காலமெல்லாம் அழைத்த நம் முதல்வர், அப்பா என்று உங்களை அழைத்துக் கொள்ளவா, என்றார்! அந்த ஒரு வார்த்தையில், நம்முடைய உள்ளங்களையெல்லாம் உருக்கியவர், இன்று அப்பா என்று அந்தக் குழந்தைகள் எல்லாம் அழைத்தபோது, என் நெஞ்சம் நெகிழ்ந்துபோனது என்று சொல்லக்கூடிய ஒரு தலைவர்.

அந்த நெகிழ்ச்சி, நடிப்பல்ல. நடிகரும் அல்ல இவர். அந்த நெகிழ்ச்சி, உண்மையிலேயே அவருடைய ஆழ் மனதிலிருந்து வரக்கூடியது என்பது பார்த்தாலே தெரிகிறது. அவரை, குழந்தைகள் அப்பா, அப்பா என்று அழைக்கும்போது, நானும்கூட அப்பா என்று அழைக்கலாமா என்று எனக்கும்கூட தோன்றுகிறது. ஆனால், வயது ஒரு தடையாக இருக்கிறது.

அதனால், வயது மூத்தவராகிவிட்ட எனக்கு வாழ்த்த வயது இருக்கிறது. எனவே, அவரை வாழ்த்துவோமாக!

**இவர், குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன் இவர்.**

**இவர் நோய் நொடியின்றி பல்லாண்டு வாழ்க!**

பல ஆண்டு வாழ்க! வாழ்க தமிழ்! வாழ்க தமிழர்! வாழ்க தமிழ்நாடு! நன்றி, வணக்கம்!

இவ்வாறு நீதியரசர் அக்பர்அலி அவர்கள் உரையாற்றினார்.

### கல்விக்கு நிதி ஒதுக்க மறுப்பது

# மாநில சுயாட்சி, தேச ஒற்றுமை மற்றும் மொழி உரிமை மீது தொடுக்கப்படும் நேரடித் தாக்குதல்!

## மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு கண்டனம்!

புதுடெல்லி, மார்ச் 13 -

மாநிலங்களவையில் கல்வி தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசியதாவது:

இந்தியா சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தற்போது வரை மௌலானா அபுல் கலாம் ஆசாத், எம்.சி. சாக்ளா, வி.கே.ஆர்.வி. ராவ் போன்ற பெருமகன்கள் உள்ளிட்ட 30 பேர் ஒன்றிய கல்வி அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால், மோடி தலைமையிலான பி.ஜே.பி. அரசு மத்தியில் அமைந்ததிலிருந்துதான் பெரும் போராட்டங் கள், பிரச்சினைகள், அர்த்தமற்ற கொள்கை முடிவுகள் போன்றவற்றால் நாட்டின் கல்வித்துறை பாதிக்கப்பட்டிருக்கிறது.

மோடியின் தலைமையிலான அரசுகளில்தான் கல்வி தொடர்பான விஷயங்களில் மாநில சுயாட்சியை, மாநிலத்திற்கென உள்ள அதிகாரத்தைப் பறி ப்பது, அனைவரையும் உள்ளடக்கிய கொள்கைகளை மாற்றி, கூட்டாட்சித் தத்துவத்துக்கென உருவாக்கப்பட்ட அடிப்படைக் கொள் கைகளைத் தகர்ப்பது போன்ற காரியங்கள் இப்போது நடந்தேறி வருகின்றன.

2014-16 ல் ஸ்மிரிதி இராணி கல்வி அமைச்சராக இருந்தபோது பாடத்திட்டங்கள் மாற்றப்பட்டன; 2016 - 19 ல் பிரகாஷ் ஜவ



டேகர் அமைச்சராக இருந்த போது நீட் தேர்வை அமல்படுத்தி மாநில சுயாட்சி பாதிக்கப்பட்டது. 2019-21 ல் ரமேஷ் பொக்ரியால் அமைச்சராக இருந்தபோது கொரோனா காலத்தில் நீட் மற்றும் ஜேஇஇ தேர்வுகள் சர்ச்சை பெருமளவு வெடித்தது. 2021 ல் இருந்து தற்போது வரை அமைச்சராக உள்ள தர்மேந்திரப் பிரதான் காலத்தில்தான் புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்த முனைந்து, மாநில சுயாட்சியின் மீது தாக்குதல் நடக்கிறது. கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் எம்.பி.க்களுக்கான கோட்டாவை ஒழித்தவரும் இவர்தான்.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் கல்வி பரவலாக்கப்பட்டது. காலனி அமைப்பு முறையில் கல்வி பெறும் வசதி ஓரிடத்தில் குவிக்க ப்பட்டு, லட்சக் கணக்கான ஏழைகளுக்கு அதற்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டது. சுதந்திர இந்தியாவில் இந்த ஏற்றத் தாழ்வுகளை ஒழித்து அனைவருக்கும் கல்வியை வழங்க வேண்டிய அவசியம் எழுந்தது.

**கல்வி முக்கிய பங்கு!**

ஒரு தேசத்தைக் கட்டமைப்பதில் கல்வி முக்கியமான ஓர் ஆயுதம் என்பதை உணர்ந்து கல்வியை பொதுப் பட்டியலில் சேர்த்தார்கள் நமது அரசியல் சட்ட வகுப்பாளர்கள். கல்வி வழங்குவது தொடர்பான பொறுப்பு மத்திய, மாநில அரசுகளுக்கு சமமாக உள்ளதை உணர்ந்து தான் அந்த ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நாள் முதலாக கல்வி தொடர்பான சீர்திருத்தத்திலும் சாதனைகளிலும் தமிழ்நாடு மற்ற எல்லா மாநிலங்களுக்கும் முன் மாதிரியாக விளங்கி வருகிறது.

இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் சிந்திக்கும் முன்பாக 1947 லேயே கட்டாயக் கல்வியை சட்டமாக்கியது தமிழ்நாடுதான். 1960 ல் தமிழகப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டு அதன் பிறகு இன்று வரை இந்தியாவின் பிற மாநிலங்களில் அதைப் பின்பற்றி அமல்படுத்த வேண்டிய நிலை தொடர்கிறது. இதன் மூலம் பள்ளிகளில் மாணவர்கள் சேர்வது அதிகமானது மட்டுமின்றி மாணவர்கள் ஏழ்மையால் இடை நிற்றலும் கணிசமாகக் குறைந்தது. இதன் காரணமாக இந்தியாவில் கல்வியறிவு பெற்றோர் அதிகமாக உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு எப்போதும் உயர்ந்து நிற்கிறது.

1960 முதல் இருமொழிக் கொள்கையை அமல்படுத்தி வரும் தமிழ்நாடுதான் பள்ளி கல்லூரிகளில் மாணவர்கள் சேரும் விகிதத்தை அதிக அளவில் இன்றுவரை தக்க வைத்திருக்கிறது.

**தமிழ் நாட்டில் கல்வி அறிவு பெற்றோர் அதிகம்!**

2011 ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் கல்வியறிவு பெற்றோர் 80.3 சதவிகிதம். இது தேசிய சராசரியை விட அதிகம். இந்தியாவில் பொறியியல் படிப்பின் மையமாக விளங்குவதும்; உயர்கல்வியில் தேசிய சராசரியைவிட இரண்டு மடங்கு அதிகம் வைத்திருப்பதும் தமிழ்நாடுதான்.

அதுமட்டுமல்ல... விலையில்லா சீருடை, சைக்கிள், லேப்டாப் என வழங்கி கல்வி கற்பதில் ஏற்றத் தாழ்வுகள் இல்லாத நிலையை உருவாக்கிய மாநிலமும் தமிழ்நாடுதான்.

காலை உணவுத் திட்டத்தை அமல்படுத்தி, இருமொழிக் கொள்கையை உறுதிபடத் தொடர்ந்து அமல்படுத்தியதால்தான் பள்ளிக்கல்வித் தரம், உயர் கல்வியில் மாணவர்கள் சேரும் விகிதம் ஆகியவற்றில் தமிழ்நாடு உயர்ந்து நின்று மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மாணவர்களும் தரமான கல்வியைப் பெற வழிவகுக்கும் கல்வி உரிமைச் சட்டத்தை அமல்படுத்திய முதல் மாநிலம் தமிழகம் தான். இப்படி சமூகத்தை மேம்படுத்தும் கொள்கைகளை தயக்கமே இல்லாமல் துணிச்சலாக அமல்படுத்த தமிழ்நாடு தவறியதே இல்லை.

அப்படித்தான் மக்கள் தொகை கட்டுப்பாட்டுத் திட்டத்தையும் வெற்றிகரமாக அமல்படுத்தியது தமிழ்நாடு அரசு. இந்த விஷயத்தில் ஒன்றிய அரசு நிர்ணயித்த அத்தனை இலக்குகளையும் குறிப் பிட்ட காலக்கெடுவுக்கு முன்பாகவே நிறைவேற்றி சாதித்தது தமிழ்நாடு அரசு. இதற்காகவே தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தமிழ்நாட்டை வஞ்சிக்கத் துடிக்கிறார்கள்.

சமூக நீதிக்கு எதிரானது, கொள்கைத் தெளிவற்றது, கூட்டாட்சித் தத்துவத்தை சிதைக்கிறது, மாநில சுயாட்சியை பறிக்கிறது என்பதால் தான் நீட் தேர்வு மற்றும் புதிய கல்விக் கொள்கைகளை தமிழ்நாடு எதிர்க்கிறது. ஆனால், இந்த பி.ஜே.பி. அரசு, தவறான தெளிவற்ற, சமூக நீதிக்கு எதிரான கொள்கைகளை ஏற்கச் சொல்லி தமிழ்நாட்டை நிர்பந்திக்கிறது.

சமூகநீதியை நிலைநாட்டி, கல்வியில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டின் மீது இத்தகைய நிர்பந்தத் தைச் செய்வதற்காக இந்த கல்வி அமைச்சரும் இந்த அரசும் வருத்தப்பட வேண்டும். இந்த தவறான கொள்கைகளை ஏற்கவில்லை என்பதற்காக, வகுப்பறைகளை மேம்படுத்துவது, ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பது, கல்விபெறும் வசதிகளை ஏற்படுத்துவது போன்ற பணிகளுக்காக ஒன்றிய அரசு தமிழகத்திற்குத் தர வேண்டிய நிதியைத் தராமல், அதை வேறு மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளித்திருப்பது இந்த கல்வி அமைச்சரின் பழி வாங்கும் போக்கையும் இந்த அரசின் சகிப்புத்தன்மையற்ற போக்கையும்தான் காட்டுகின்றன. இவர் களது இந்த நடவடிக்கையால், மாநிலத்தில் கல்வி வளர்ச்சி தடைபடும் என்பது பற்றியோ, கிராமப் பகுதிகளில் கல்வி பெறும் வாய்ப்புகள் பாதிக்கப்படும் என்பது பற்றியோ இந்த ஒன்றிய அரசுக்கு கவலையில்லை.

இந்த நேரத்தில் நான் சிலவற்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன். புதியன் கல்விக்கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்வதாக ஒருபோதும் சொன்னதில்லை. இதற்கென ஒரு குழுவை நியமித்து ஆராய்ந்து அதனடிப்படையில் முடிவெடுப்பதாகச் சொல்லியிருந்தோம். ஆய்வின் முடிவில் இந்த ஒன்றிய அரசு இப்போது கொண்டுவரத் துடிக்கும் பிஎம் ́ ரீ பள்ளி என்பது கடந்த காலத்தில் மும்மொழிக் கொள்கையை திணிக்க முனைந்த நவோதயா பள்ளிகளைப் போன்றதே என்பது தெரிய வந்ததால், புதிய கல்விக்கொள்கையை நாங்கள் ஏற்க மாட்டோம் என்று எங்கள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆகஸ்ட் 2024 லேயே ஒன்றிய அரசுக்கு கடிதம் மூலமாகச் சொல்லிவிட்டார். உண்மை இவ்வாறு இருக்க, முதலில் ஒப்புக் கொண்டோம்... இப்போது மறுக்கிறோம் என்ற பேச்சுக்கு இடமே இல்லையே..?

புதிய கல்விக்கொள்கையில் நீங்கள் எதையெல்லாம் சொல்லியிருக்கிறீர்களோ அதில் பலவற்றை பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அமல்படுத்தி வருகிறது தமிழ்நாடு அரசு. ஆனால், தமிழக மக்களின் உணர்வுகளுக்கு எதிரான மும்மொழிக் கொள்கையை மறைமுகமாகத் திணிக்க வலியுறுத்தும் பிஎம் ́ ரீ பள்ளிகளை நாங்கள் ஏற்க மாட்டோம் என்று சொன்னதற்காக சமக்ரா சிக்ஷா திட்டத்திற்காக ஒதுக்க வேண்டிய சுமார் 2000 கோடி ரூபாய் நிதியைத் தராமல் நிறுத்தி வைப்பது எந்த வகையில் நியாயம்? கல்வியை பொதுப்பட்டியலில் சேர்த்து, அரசமைப்புச் சட்டத்தால் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாநில சுயாட்சி உரிமையைப் பறிப்பதுபோல இது உள்ளது. மாநிலத்தில் ஏற்கனவே உள்ள சில கல்வித் திட்டங்களை புதிய கல்விக் கொள்கையின் நீட்சியாகக் காட்ட ஒன்றிய அரசு முனைவதும் தவறானதும் உண்மைக்கு மாறானதுமாகும்.

**கல்விக்கு வழங்க வேண்டிய நிதி!**

கல்விக்கு வழங்க வேண்டிய நிதியை உரிய நேரத்தில் தராமல் இழுத்தடிப்பது நிர்வாகப் பிரச்சினை மட்டு மல்ல... அரசமைப்புச் சட்டம் மற்றும் கூட்டாட்சித் தத்துவம் சம்பந்தப்பட்ட மிக முக்கிய பிரச்சினையா கும். அரசியல் சட்டத்தின் பிரிவு 21 ஏ, 6 வயது முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகள் கல்வி பெறுவது அடிப்படை உரிமை என்று சொல்லி உறுதி செய்கிறது. இந்த விஷயத்தில் மாநிலங்களுக்கு உள்ள அதிகாரத்தையும் அரசமைப்புச் சட்டம் மிகத் தெளிவாக வலியுறுத்துகிறது.

இந்தப் பின்னணியில் நியாயமாக வழங்க வேண்டிய கல்வி நிதியைத் தராமல் தாமதிப்பதும் மறுப்பதும் மாநில சுயாட்சி மீதும், தேச ஒற்றுமை மற்றும் மொழி உரிமை மீதும் தொடுக்கப்படும் நேரடித் தாக்குதல் ஆகும். இந்திய ஒன்றியத்தில் ஓர் அங்கமான தமிழ்நாடு, சட்டப்படி தனக்கு உரிய நியாயமான நிதிப் பகிர்வைப் பெற எல்லா உரிமைகளும் உண்டு. இந்த நிதியை தராமல் இருப்பது தமிழகத்தில் கல்வி வளர்ச்சியைத் தடைப்படுத்துவது மட்டுமின்றி, கூட்டாட்சித் தத்துவத்தை சிதைத்து, மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான இணக்கமான உறவைச் சிதைப்பதுமாகும்.

1930 முதல் இந்தி திணிப்பை எதிர்த்து வரும் தமிழகம், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த 1968 முதல் வெற்றிகரமாக இருமொழிக் கொள்கையை அமல்படுத்தி வருகிறது. வளர்ந்த நாடுகளுக்கு இணையாகவும் அதைவிட ஒருபடி மேலாகவும் கல்வியில் பல சாதனைகளை தமிழ்நாடு படைத்து வருவது இந்த இருமொழிக் கொள்கையால்தான். தமிழகம் செய்த இந்த சாதனையை இந்தியாவின் பிற மாநிலங்கள் செய்வதற்கு இன்னும் பல பத்தாண்டுகள் ஆகும். மூன்றாவது மொழி எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம் என்று புதிய கல்விக் கொள்கை சொன்னாலும், அது இந்தியைத் திணிப்பதற்கான ஒன்றிய அரசின் முயற்சி என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள். மும்மொழிக் கொள்கை என்பது ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மாணவர்களை பெரிதும் பாதிக்கும் என்பதே உண்மை.

இவ்வளவு உண்மைகள் தெரிந்திருந்தும், புதிய கல்விக்கொள்கையை ஏற்காவிட்டால் நிதி தரமுடியாது என்று அமைச்சர் தர்மேந்திர பிரதான் சொல்வது நியாயமற்றது மட்டுமல்ல, அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமானதும்கூட.

இந்தி கற்பதை தமிழ்நாடு அரசு எதிர்க்கவில்லை; அதைத் திணிப்பதைத்தான் எதிர்க்கிறது. அதனால்தான், இப்படி நியாயமற்ற கொள்கையை ஏற்றால்தான் நிதி வரும் என்றால் அது எத்தனை ஆயிரம் கோடி என்றாலும் தேவையில்லை; இந்தி திணிப்பை தொடர்ந்து எதிர்ப்போம் என்று சொல்லியிருக்கிறார் எங்கள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள். தமிழகத்தில் பி.ஜே.பி.யைத் தவிர மற்ற அனைத்துக் கட்சிகளும் இந்தக் கருத்தில் உடன்படுகிறார்கள்.

தமிழ்நாட்டு மக்களின் இந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு, இந்தி மற்றும் சமஸ்கிருதத்தை திணிப்பதைக் கைவிட்டு, தமிழகத்திற்குத் தர வேண்டிய நிதியை ஒன்றிய அரசு உடனடியாகத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதன்மூலம் தமிழகத்தில் கல்வி வளர்ச்சிப் பணிகள் தடைபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமையும் ஒன்றிய அரசுக்கு உள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதன் மூலம், மாநில அரசுகள் கூட்டாட்சித் தத்துவத்தின்படி பெற வேண்டிய நிதிகளைப் பெறுவதையும், இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் உள்ள கல்வி பெறும் உரிமை நிலைநாட்டப்படுவதையும் ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.



செங்கல்பட்டு மாவட்ட இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் ரமலான் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி மாவட்ட தலைவர் முகமது பேக் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்முகமது அபுபக்கர்ஆகியோர் கலந்து கொண்டு நோன்பு திறக்கும் நிகழ்ச்சி சிறப்பித்தார்கள்.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக சார்பில் காஞ்சிபுரம் மாநகராட்சியில். தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும். ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டனக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்கள். குடியாத்தம் பெரிய கோடீஸ்வரன் பி எம். ஆனந்த் சிறப்புரையாற்றினர். உடன் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. மற்றும் மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன் மாவட்ட பொருளாளர் சன் பிராண்டு கே.ஆறுமுகம். மற்றும் பகுதி செயலாளர்கள் மாநகர நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.